## ஊருணி ஊற்று

| மாத சந்தா தொகை | மாதங்கள் | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| ₹ 1,00,000 | 30 | ₹ 30,00,000 |

நாமறிந்த நவக்கிரகம், நவசக்தி, நவதீர்த்தம் போன்றவற்றின் அருளோடு
நவமணிகளும், நவநிதியும் சேர்ந்திட நவராத்திரி விழாவின்
ஊருணி ஊற்று என்ற சிறப்பு சீட்டுத்திட்டத்தில் இணைவீர் !

அகரம் இட்டு !
சிகரம் எட்டிடின் !!
மகரம் கிட்டிடும் !!!


ஆர்.ஏ.என்.முத்துசாமி முதலியார்
சிட்பண்ட்ஸ் & பைனான்ஸ் (பி) லிமிடெட்

H.O. : 35-B, ஈஸ்வரன் கோயில் வீதி, ஈரோடு - 638 001. போன் : 2214774
B.O. : 161-A, கரியகாளியம்மன் காம்ப்ளக்ஸ், கடை எண். 11 (கீழ்தளம்), கச்சேரி மேடு,
கோபிசெட்டிபாளையம் - 638 452. போன் : 04285 - 228700


## ஊருணி ஊற்று



எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் — குறள் 666

*தொழில் செய்ய எண்ணியவர்*
*தொழில் திட்டம் உடையவரானால்*
*எண்ணிய பொருளை*
*எண்ணியபடியே எளிதில் எய்துவர்*

உயரம் தொட்டவர்களே !

## சிகரம் தொடலாம் வாருங்கள் !!

உயரம் தொட்டவர்களே என்று இரண்டு சொற்களால் எழுதுவது எளிது. வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு மிகச் சுலபமாக இந்நிலை நீங்கள் எட்டியது போல் தோன்றும். ஆனால் உயரம் தொட நீங்கள் எடுத்துக் கொண்ட நெடிய காலமும், தளராத முயற்சியும், நேர்மையான உழைப்பும் பொறுமை காத்தலும், கடலை விட ஆழமானதும் விண்ணை விடப் பெரியதும் ஆகும். ஆங்கிலத்தில் சிறப்பு சொற்றொடர் ஒன்றுண்டு.

எவரொருவர் மற்றவர்கள் உறங்கும் பொழுதிலும், முன்னேற வேண்டுமென்ற முனைப்போடு, அயராது உழைத்தார்களோ அவர்களே இன்று உயரத்தில் இருப்பவர்கள். இதுபோல் உயரம் தொட்ட உங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் ஒரு தோழனாய் என்றும் இருக்கும் RANM நிறுவனம் உங்களை சிகரம் தொடுவதற்கு சிரத்தையோடு அழைக்கிறது.

செய்யும் செயலை, ஏற்ற காலமறிந்து, தகுந்த இடத்துடன், பொருந்தச் செய்தால், ஞாலம் கருதினும் கை கூடுமல்லவா ! அத்தகைய ஏற்ற காலம் கனிந்து வந்து, ஐம்பத்தி நான்காம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும், பொன்விழா நிறுவனமாக RANM என்ற தகுந்த இடம், சிகரம் தொடப்போகும் உங்களுக்காகவே ஊருணி ஊற்று என்ற பொருத்தமான புதிய சீட்டினை தொடங்க உள்ளது.

தகுதிமிகு வாடிக்கையாளர்களை தேர்வு செய்வதில் கவனத்துடனும், சீட்டுத் தொழிலில் நேர்மையான கோட்பாட்டுடனும், சந்தாதாரர்களின் பொருளுக்கு தகுந்த முறையில் பாதுகாப்பு வழங்குவதுடன், சேவையே குறிக்கோளாய்க் கொண்டு உங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உகந்த நிறுவனமாக நாங்கள் வளர்ந்து நிற்கிறோம், நிற்போம்.

இதனால் தான் கடந்த அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலங்களில் நாங்கள் நடந்து வந்த பாதையிலே எங்களோடு நீங்களும் உங்கள் சந்ததியினரும் இணைந்து வந்து தோள் கொடுத்துப் பெருமைப்படுத்தினீர்கள். அன்பான எம் நிறுவன நிரந்தர வாடிக்கையாளராகிய தொழில் வல்லுனர்களே உங்களுக்கு, எங்கள் பொன்விழா நிறுவனத்தின் உளங்கனிந்த நன்றியினை இந்த நேரத்தில் உரித்தாக்கி கொள்வதில் பெருமை கொள்கிறோம் நன்றி.

இந்த புதிய சீட்டுத் திட்டத்தில் நீங்கள் இணைவது, உங்கள் எதிர்கால அவசிய பயன்பாடுகளுக்கான ஒரு சிறந்த முதலீடாகவும், தங்கள் சீட்டுத் தொகை உங்களுடைய புதியதொரு தொலைநோக்குப் பார்வைக்கான புதிய முயற்சிகளுக்கு உதவும் விதமாகவும், உங்கள் தொழில் பல்முனைகளிலும் வளர்ச்சி அடைய, உன்னதமான ஊக்கம் கொடுப்பதாகவும் அமையும்.

எனவே உயர்ந்த லட்சியங்களைக் கொண்டு வெற்றி முகட்டை எட்டப்போகும் உங்கள் திட்டங்களுக்கு இப்புதிய சீட்டு உறுதுணையாக, ஊன்று கோலாக, உச்சம் தொட சான்றாக, செழிப்பான வாழ்விற்கு மேலும் துணையாக விளங்கும் என்பது உறுதி. தலைமுறைகள் கடந்தும், பாரம்பரியப் பண்பிலிருந்து வழுவாது வாடிக்கையாளர்களின் சேவையில் தன்னிகரின்றித் திகழும் RANM நிறுவனம் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ச்சிப் பாதையிலே பெருமையுடன் நடைபோட, இதுகாறும் நீங்கள் எங்களை நம்பிக் கை கோர்த்ததினால் தான் சாத்தியமானது என்றால் அதில் மிகை ஏதும் இல்லை. என்றென்றும் எங்கள் அர்ப்பணிப்பான சேவை தொடரும்

**வாருங்கள் சேர்ந்தே அடி எடுத்து சிகரம் தொடலாம்.**